DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.பிரைட் ஜசக் சுவாமிநாதன் | Father/Husband Name : நாடான்கண் |
| Age : 53 | Village : பாளையம் |
| Taluk : கல்குளம் | Calling : சிறப்பு சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03.03.2026 ( Accused Present).

<u>**முதல் விசாரணை**</u> :-

1. நான் தற்போது சாத்தூர் நகர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் பணியாற்றிய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆபிரகாம் மற்றும் சார்பு ஆய்வாளர் முருகேசன் ஆகியோர்களை தெரியும், அவர்களுடைய கையெழுத்தும் எனக்கு தெரியும். அவர்கள் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து என்னால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க முடியும்.

3. கடந்த 13.06.2023 ம் தேதி 20.00 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆபிரகாம் நிலைய அலுவலில் இருந்த போது சாத்தூர் பெருமாள் கோவில் வடக்கு மாட வீதியைச் சேர்ந்த தங்கசாமி மகன் கருப்பசாமி பாண்டியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைகேற்ப சாத்தூர் நகர் காவல்நிலைய குற்ற எண் 218/2023 பிரிவுகள் 341, 294(b), 324, 506(2) இ.த.ச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையுடன் அசல் புகார் மனுவை இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **<u>(புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது</u>).**

4. பின்னர் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் முருகேசன் 13.06.2023 ம் தேதி மதியம் 09.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சம்சுதீன், மாரீ ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **<u>(பார்வை மகஜர் அ.சா.ஆ. 5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>).**

5. பின்னர் சாட்சிகள் கருப்பசாமி, பால்ராஜ், செய்யது அலி முன்னா, மாரீ, சம்சுதீன், பால்பாண்டி, மாரியப்பன், பெருமாள்சாமி, முருகன் த/பெ.ஜெயபால், முருகன் த/பெ.மாயாண்டி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும், இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் அர்ச்சனா அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து விபத்து பதிவேட்டை பெற்றுள்ளார். **<u>(விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>.** பின்னர் இவ்வழக்கினை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆபிரகாம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. பின்னர் தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின்

**விசாரணையிலிருந்தும் குற்ற சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரிகள் மீது பிரிவுகள் 341, 294(b), 324, 506(2) இ.த.ச –ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

7. **பொய்யான புகார் மனு பெற்று, எதிரிக்கு எதிராக இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யயப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் எதிரிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.** எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.**

**Judicial Magistrate 2, Sattur.**